1973 நவம்பர் 27]

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பியிருக்கிறது. ஆகவே அடுத்த ஆண்டாவது இந்தத் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்த முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது சிக்கனமற்ற திட்டங்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. அதை அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதைப்பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.

கருவாட்டுப்பாறையில் குட்டை அமைப்புத் திட்டம்.

* 427 வினு—**திரு. வீ. செல்லதுரை :** மாண்புமிகு பொதுபணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், க.குட்டப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த "கருவாட்டுப்பாறை" பீட்டை சேர்ந்த பள்ளத்தில் "குட்டை" அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை. க.குட்டைப் பட்டியில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறைய பாண்டு ஸ்கீம் மூலமாகக் குளங்கள் அமைத்திருப்பதன் மூலம் அங்கே ஓரளவு குடிதண்ணீர் கிடைக் கிறது. அதைப்போல மிக வறண்ட பகுதியாகிய வடாற்காடு மாவட்டத்திலும் பாண்டு ஸ்கீமைச் செயல்படுத்த முன்வருவார் களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோயம்புத்தூர் மாவட்டம் குட்டை திட்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். இன்னமும் அங்கே குடி தண்ணீர் பிரச்சினை தீர்ந்தபாடில்லை.

வேலம்பாளையம் பேரூராட்சி சாலைகள்.

* 428 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், 15 வேலம்பாளையம் பேரூராட்சி மன்றத்திற்கு உட்பட்ட சாலைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று திருப்பூர் தொகுதி பேரவை

உறுப்பினரிடமிருந்து அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) அவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட 10 சாலைகளில் ஒன்றான திருப்பூர் நகராட்சி எல்லையிலிருந்து அங்கேரிபாளையம் வழியாக செட்டிபாளையம் வரை செல்லும் சாலையை நெடுஞ்சாலைத் துறை, 1972-73 முதல் பராமரிப்புக்காக மேற்கொள்ளுமாறு அரசு ஆணையிட்டுள்ளது. மற்றும் உடுமலை-திருப்பூர் பாதையிலிருந்து வீரபாண்டி வரை செல்லும் சாலையை 'கிராமச்சாலைகள்' சிறப்புத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்வதற்காக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. இதர சாலைகளை அரசு மேற்கொள்வது குறித்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் பரிந்துரைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

சுக்கிரப்பட்டி-ஆனந்தூர் சாலையில் பாலங்கள்.

*429 வினா—**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பொறுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், சுக்கிரப்பட்டி-ஆனந்தூர் சாலை யில் கட்டப்பட வேண்டிய பாலங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப் பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ஒப்பளிப்பு வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. மலைக்கண்ணன் : இந்தச் சாலை 1962-இல் அரசாங்கத் தால் எடுத்துக்கொள்ளப்பட்டு, அன்றிலிருந்து பஸ் போகிறது ஆயினும் இடையில் பாலங்கள் கட்டப்படாததாலும், ரோடு மெட்டலிட்டு தார் போடப்படாததாலும் மழைக்காலங்களில் பஸ் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. ஆகவே ஐந்தாண்டுத் திட்டத்தில் 1974-75-க்குள்ளாகவாவது இந்தச் சாலை செப்பனிட்டுத் தரப்படுமா ?